# ஈரோட்டில் ஹிந்தி எதிர்ப்புக் கூட்டம்.

## வார்தா திட்டக் கண்டனம்

## பி. வி. அநுமந்தராவ் கர்ஜனை

## ஈ. வெ. ரா. விளக்கம்.

(நமது நிருபர்)

ஈரோடு, மே. 21

ஈரோடு தாழ்ப்பட்டவர்கள் நலவுரிமைச் சங்கத்தினாதரவில் நேற்று (20-5-38 மாலை 6 30 மணிக்கு, ஈரோடு மகாஜனஹைஸ்கூல் சரஸ்வதி ஹாலில் ஈரோடு பிரபல அட்வகேட் தோழர் ஈ. எம். அண்ணாமலை பி. ஏ. பி எல். அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு வாலிபர்களும் வியாபாரிகளும், முஸ்லிம்களுமாக சுமார் 400 பேர்களுக்கு மேல் விஜயம் செய்திருந்தார்கள்.

ஒரு ஆதிதிராவிடத் தோழரால் கீதம் பாடப்பட்டது.

பின் தலைவர் தோழர் அண்ணாமலை அவர்கள் முகவுரையாகக் கூட்டம் கூட்டப்பட்டதைப்பற்றிப் பேசிவிட்டு, பிரபல தேசபக்தரும், பலமுறை சிறை சென்றவருமான தோழர் பி. வி. அநுமந்தராவ் அவர்களை "ஹிந்தியும், வார்தாக்கல்வித்திட்டமும்" என்பது பற்றி பேசும்படி கூறினார்

அதன்படியே நீண்ட கரகோஷங்களுக்கிடையில் தோழர் அநுமந்தராவ் அவர்கள் ஹிந்தியினால் தமிழுக்கு வரும் ஆபத்து, ஹிந்தி வந்தால் மாணவர்களுக்கு நேரும் கஷ்டம், ஹிந்தியை ஒழிக்க உண்ணாவிரதமிருப்பதை மந்திரியார் பரிகசிக்கும் சூழ்ச்சி ஹிந்தி வருவதை தமிழ்நாட்டிலுள்ள ஒரு தேசிய பத்திரிகையும், ஒரு வக்கீலும் கண்டிக்காத காரணம் இவைகளைப்பற்றி மிகவும் உணர்ச்சியுடனும், விளக்கமாகவும் பேசி "ஹிந்தி ஒழிய வேண்டும், நாங்கள் ஆதரவு கொடுக்கிறோம்" என்பதைக் காட்ட கூட்டத்திலுள்ள அனைவர்களையும் கரகோஷம் செய்யும்படி கேட்டுக் கொண்டார். கூட்டத்திலுள்ள அனைவரும் பெருத்த கரகோஷம் செய்தனர்.

பின் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் நீண்ட கரகோஷத்தினிடையே எழுந்து முதலில் பேசிய தோழர் அநுமந்தராவ் அவர்களைப்பற்றிப் பேசிவிட்டு, முதல் மந்திரியார் ஹிந்தியைக் கட்டாயபடுத்துவதின் நோக்கம், ஹிந்தி வந்தால் தமிழர்கள் அடையக்கூடிய தீமைகள், ஹிந்தி வந்தால் செலவாகும் தொகை, வார்தா கல்வித் திட்டத்தால் ஏற்படும் தீமைகள் ஆகியவைகளை விளக்கிவிட்டு ஹிந்தி, வார்தா திட்டம் வந்தால் பார்ப்பனால்லாதார் என்றென்றும் அடிமைப்பட வேண்டுமென்று மிகவும் விளக்கமாகவும் விரிவாகவும் பல உதாரணங்களுடன் பேசினார். பின் ஒரு நண்பரால் கேட்கப்பட்ட சந்தேகங்களுக்குப் பதில் கூறினார். பின் தலைவர் தமது முடிவுரையில் ஹிந்தி, வார்தாக் கல்வித் திட்டம் முதலியவைகளைக் கண்டித்துப் பேசியபின் தோழர் எ. ஷண்முகம் அவர்கள் நன்றி கூற கூட்டம் இரவு 9 மணிக்குக் கலைந்தது.